**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.64/2024 – PW- 11**

| | |
|---|---|
| Name | திரு. சந்திரன் |
| Husband/Father Name | முத்தப்ப ரெட்டி |
| Village /Area | கோவிந்தாங்கல் |
| Taluk | சோளிங்கர் |
| Occupation | விவசாயம் |
| Age | 56 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.11.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 11.09.2021 அன்று நாங்கள் பானாவரம் சென்றிருந்தோம். நானும் எழுமலையும் சென்றிருந்த போது அங்கு பானாவரம் போலீசார் என்னிடம் கையொப்பம் செய்யுமாறு கேட்டதன் அடிப்படையில் கையொப்பம் செய்தோம். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் இது சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

எதிரிகளை எனக்கு தெரியும் எங்கள் ஊர்காரர்கள் தான். 14.09.2021 அன்று நானும் என் நண்பர் ஏழுமலை என்பவரும் சோளிங்கர் சென்று இரவு 08.00 மணிக்கு ஆயல் கூட்ரோடு வந்த போது பாணாவரம் ஆய்வாளர் அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்த உமேஷ், அன்பு, கிருஷ்ணன், கிருஷ்ணவேணி ஆகியோரிடம் விசாரணை செய்துக்கொண்டிருந்தார் என்றும், ஆய்வாளரின் விசாரணையின் போது எதிரி உமேஷ் என்பவர் எங்கள் ஊரை சேர்ந்த ரங்கநாதன் என்பவரை அவரும் அவரது உறவினர்களும் அடித்து கொலை செய்தது சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வந்ததால் அதற்கு சாட்சியாக இருக்க எங்களை கேட்டு கொண்டதால் எதிரி உமேஷ் என்பவர் எந்த வித வற்புறுத்தலும், ஆசை வார்த்தையும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ரங்கநாதன் என்பவருக்கும், எதிரிகளுக்கும் ஏற்கனவே நிலம் சம்பந்தமான இருந்த முன் விரோதம் காரணமாகவும், 14.09.2021 அன்று காலை 08.00 மணிக்கு கோவிந்தாங்கல் பஸ் டாப்பிற்கு வந்து கொண்டிருந்த ரங்கநாதனை இரும்பு பைப்பாலும், கொம்பாலும் தாக்கியதில் ரங்கநாதனுக்கு பலத்த இரத்த காயம் ஏற்பட்டு இறந்து விட்டதாகவும், தங்கள் கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தின் அடிப்படையில் தங்களை அழைத்து சென்றால் ரங்கநாதனை அடித்த இரும்பு பைப்பையும், மரக்கொம்பையும் எடுத்து கொடுப்பதாக அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் ஏழுமலை என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், பின்பு எதிரி உமேஷ் என்பவர் எதிரி அன்பு என்பரின் வீட்டின் பின்புறம் மறைத்து வைத்திருந்த இரத்தக்கறை படிந்த இரும்பு பைப் மற்றும் மரக்கொம்பு மற்றும்

சம்பவத்தின் போது உமேஷ் என்பவர் அணிந்திருந்த சட்டை மற்றும் லுங்கியையும் அன்பு என்பவர் அணிந்திருந்த டீ சர்ட், மற்றும் லுங்கியை எடுத்து ஆஜர் படுத்தியதை இரவு 09.30 மணிக்கு மகஜரில் கைப்பற்றிக்கொண்டார்கள் என்றும் அந்த மகஜரில் நானும் ஏழுமலையும் கையொப்பம் செய்துவிட்டு போலீசாரிடம் நடந்த சம்பவத்தை பற்றி கூறிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளுக்கு பப்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** இல்லை

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.19 13:55:09 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.